## மக்கள் பங்கேற்புடன் கூடிய நீர்ப்பாசன மேலாண்மைத் திட்டம்

### அறிக்கை

**ஆலோசனைக்குழு மற்றும் பாசனத்தாரர் சங்கத்தலைவர்களின் கூட்டம் 15.11.2007 அன்று காலை 10.00 மணிக்கு நாகப்பட்டினம் வி.பி.என் ஹோட்டலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு குமாரி. பிரியா வரவேற்புரை ஆற்றினார்.**

**நிகழ்ச்சி நிரல்:**

1. அறிமுக உரை
2. துல்லிய அளவிலான திட்டமிடுதல்
3. சங்க பதிவு மற்றும் வங்கிக் கணக்கு
4. அங்கத்தினர் சேர்க்கை
5. கடைமடை அளவிலான தொழில்நுட்ப அங்கிகாரக்குழு அமைத்தல்
6. புனே களப்பயண அனுபவ பகிர்வு

**1. துல்லிய அளவிலான திட்டமிடுதல்**

**NRMU அணித்தலைவர் திரு.பிரேம்குமார் கூட்டத்தின் நோக்கங்களைப் பற்றி விளக்கி கூறியதை அடுத்து கடைமடை 9ஐ சேர்ந்த திரு.ராம்குமார் மற்றும் திரு.பெருமாள் அவர்களை தன்னிலபாடி ஊராட்சியில் நடைபெற்ற துல்லிய அளவிலான திட்டமிடுதல் பற்றி விளக்கம் அளித்தனர். அதைத் தொடர்ந்து கடைமடை 4ஜ சேர்ந்த திரு.ராமசந்திரன் மற்றும் செல்வி.தேவி ஆகியவர்கள் கிடங்கல் ஊராட்சியில் நடைபெற்ற திட்டமிடுதலை விளக்கினார்கள். தொடர்ந்து நடந்த விவாதத்தில் வரைபடத்தில் ஏற்பட்டுள்ள குறைவை சுட்டிக்காட்டியது. இது அடுத்த கட்டத்தில் சரிபார்க்கப்படும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் 2007 நவம்பர் 30ந்தேதிக்குள் இவ்வேலையை முடிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. பஞ்சாயத்து மற்றும் பாசனத்தாரர் சங்கத் தலைவர்கள் இதற்கான முழு ஒத்துழைப்பையும் அளிப்பதாக தீர்மானிக்கப்பட்டது. இதற்கான தேதிகள் பின்வருமாறு.**

| வ.எண் | பஞ்சாயத்து | தேதி |
|---|---|---|
| 1 | காளமநல்லூர் | 20.11.2007 & 21.11.2007 |
| 2 | மருதம்பள்ளம் | 22.11.2007 |
| 3 | பிள்ளைபெருமாள்நல்லூர் | 23.11.2007 |
| 4 | மாமாக்குடி | 17.11.2007 |
| 5 | சின்னத்தும்புர் | 22.11.2007 |
| 6 | பெரியதும்புர் | 20.11.2007 |
| 7 | வடவூர் | 21.11.2007 |
| 8 | ஓரத்தூர் | 24.11.2007 |
| 9 | கருவேலங்கடை | 23.11.2007 |
| 10 | பாப்பாகோவில் | 22.11.2007 |
| 11 | அகலங்கன் | 25.11.2007 |
| 12 | வேப்பஞ்சேரி | 25.11.2007 |
| 13 | குறிச்சி | 20.11.2007 |
| 14 | மகாதானம் | 22.11.2007 |
| 15 | பாலகுறிச்சி | 22.11.2007 & 23.11.2007 |
| 16 | சோழவித்யாபுரம் | 17.11.2007 |
| 17 | மகேந்திரபள்ளி | 20.11.2007 |

**2. சங்க பதிவு மற்றும் வங்கிக் கணக்கு**

பஞ்சாயத்து அளவிலான பாசனத்தாரர் சங்கங்களை பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது. சங்கப் பதிவுக்கான அமைப்பு முறைச்சட்டம் தயாரித்து அதன் நகல்களை விவாதத்திற்கும் அங்கிகாரத்திற்குமாக சங்கங்களுக்கு அனுப்பி வைக்க NCRC பெறுப்பு எடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

சங்கங்களின் வங்கி கணக்கு தலைவர் மற்றும் பொருளாளர் பெயரில் அருகாமையிலுள்ள வங்கியில் 2007 நவம்பர் 30 ஆம் தேதிக்குள் ஆரம்பிக்கவும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

**3. உறுப்பினர் சேர்க்கை**

ஒட்டு மொத்த விவசாயிகளை உறுப்பினர்களாக சேர்க்கவும் ஒரு உறுப்பினருக்கு ரூ.50 சந்தாவாகவும் பராமரிப்பு நிதியாக ஏக்கருக்கு ரூ.10 எனவும் வருடத்திற்கு ஒருமுறை வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது.

**4. கடைமடை அளவிலான தொழில்நுட்ப அங்கிகாரக்குழு அமைத்தல்**

கடைமடை அளவிலான தொழில்நுட்ப அங்கிகாரக்குழு அமைக்க கூட்டத்தில் ஒத்துக்கொள்ளப்பட்டது. இது குறித்து அடுத்த கூட்டத்தில் விரிவாக விவாதிக்கலாம் என்றும் தீர்மானித்தது.

**5. புனே களப்பயண அனுபவ பகிர்வு**

புனே களப்பயணம் பற்றி ஒரத்தூர் பஞ்சாயத்துத் தலைவர் திரு. குணசேகரன் அவர்களும் பாப்பாகோவில் பஞ்சாயத்துத் தலைவர் திரு. முருகையன் அவர்களும் தங்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். மற்ற பஞ்சாயத்து தலைவர்களும் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். இதன் சுருக்கம் அனைத்து பஞ்சாயத்துக்களுக்கும் மற்றும் சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

நிறைவாக NCRC முதன்மை நிர்வாக அதிகாரி திருமதி. ஆனி ஜார்ஜ் பேசுகையில் புனே களப்பயணத்தில் பார்த்த பஞ்சாயத்துகளில் ஏற்பட்ட மாற்றத்திற்கான காரணங்கள் எவை என்பது பற்றி நீங்கள் நன்கு அறிய வேண்டுமென்றும் இது நமது கிராமத்தில் ஏன் சாத்தியமில்லை என்பது குறித்தும் விவாதிக்க வேண்டும் என்றார். பஞ்சாயத்து தலைவர்களாகிய நீங்கள் விரும்பினால் எத்தகையான மாற்றத்தையும் உருவாக்க முடியும் என்றும் அதற்கான சக்தி உங்களிடம் தான் இருக்கிறது என்றும் உணர்த்தினார்கள்.

கூட்டம் திரு. ராம்குமாரின் நன்றி உரையுடன் மாலை 3 மணிக்கு நிறைவடைந்தது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விபரம் :

| வ.எண் | பெயர் | பொறுப்பு | பஞ்சாயத்து |
|---|---|---|---|
| 1 | திரு. பாண்டித்துரை | பஞ்சாயத்து தலைவர் | கிடங்கல் |
| 2 | திரு. ராஜேந்திரன் | பஞ்சாயத்து தலைவர் | மகாதானம் |
| 3 | திரு. எம். ராமநாதன் | பஞ்சாயத்து தலைவர் | சின்னதம்பூர் |
| 4 | திரு. ஜாக்லின் ராஜா | பஞ்சாயத்து தலைவர் | அகலங்கன் |
| 5 | திரு. ஹரிகிருஷ்ணன் | பஞ்சாயத்து தலைவர் | வேப்பஞ்சேரி |
| 6 | திரு. பன்னீர்செல்வம் | பஞ்சாயத்து துணைத் தலைவர் | காளமநல்லூர் |
| 7 | திரு. ராமய்யன் | பஞ்சாயத்து தலைவர் | கூடலூர் |

| | | | |
|---|---|---|---|
| 8 | திரு. அறிவழகன் | பஞ்சாயத்து தலைவர் | மாமாக்குடி |
| 9 | திரு. குணசேகரன் | பஞ்சாயத்து தலைவர் | ஓரத்தூர் |
| 10 | திரு. முருகையன் | பஞ்சாயத்து தலைவர் | பாப்பாகோவில் |
| 11 | திரு. மாரிமுத்து | பஞ்சாயத்து தலைவர் | துலையாமலை (பெரியதும்பூர்) |
| 12 | திரு. ராஜாங்கம் | பஞ்சாயத்து து. தலைவர் | துலையாமலை (பெரியதும்பூர்) |
| 13 | திருமதி. பவானி | பஞ்சாயத்து தலைவர் | சோழவித்யாபுரம் |
| 14 | திரு. கணேசன் | பஞ்சாயத்து தலைவர் | கருவேலங்கடை |
| 15 | திரு. பக்கிரிசாமி | பஞ்சாயத்து தலைவர் | மருதம்பள்ளம் |
| 16 | திரு. எம். நடராஜன் | பஞ்சாயத்து து. தலைவர் | செம்பியன் மகாதேவி |
| 17 | திரு. சத்தியசீலன் | பஞ்சாயத்து தலைவர் | மகேந்திரபள்ளி |
| 18 | திரு. என். ராஜதுரை | WUA தலைவர் | பிள்ளைபெருமாள் நல்லூர் |
| 19 | திரு. வி.கே.கண்ணன் | WUA தலைவர் | மகாதானம் |
| 20 | திரு. ஜி. மதியழகன் | WUA பொருளாளர் | மகாதானம் |
| 21 | திரு. முரளிதரன் | WUA தலைவர் | வடவூர் |
| 22 | திரு. அண்ணாசாமி | WUA தலைவர் | மாமாக்குடி |
| 23 | திரு. செல்லப்பன் | WUA தலைவர் | மருதம்பள்ளம் |
| 24 | திரு. காளியமூர்த்தி | WUA செயலாளர் | மாமாக்குடி |
| 25 | திரு. காசிநாதன் | WUA தலைவர் | கிடங்கல் |
| 26 | திரு. சின்னகுஞ்சு | WUA தலைவர் | குறிச்சி |
| 27 | திரு.இராவணன் | WUA செயலாளர் | சின்னதம்பூர் |
| 28 | திரு. ஜீவானந்தம் | WUA செயலாளர் | வடவூர் |
| 29 | திரு. குப்புசாமி | WUA உறுப்பினர் | வடவூர் |
| 30 | திரு. சாதுவன் | WUA உறுப்பினர் | வடவூர் |
| 31 | திரு. நாகராஜ் | WUA தலைவர் | காளமநல்லூர் |
| 32 | திரு. ரெத்தினம் | WUA செயலாளர் | தன்னிலபாடி |
| 33 | திரு. செல்வகணபதி | WUA உறுப்பினர் | தன்னிலபாடி |
| 34 | திருமதி. பிரேமாவதி | WUA பொருளாளர் | தன்னிலபாடி |
| 35 | திரு. சந்தானம் | WUA செயலாளர் | வேப்பஞ்சேரி |
| 36 | திரு. நாராயணசாமி | WUA தலைவர் | தன்னிலபாடி |
| 37 | திரு. வி.கே.காளிமுத்து | WUA தலைவர் | துலையாமலை (பெரியதாம்பூர்) |
| 38 | திரு. அருணகிரி | WUA துணைச்செயலாளர் | பாலக்குறிச்சி |
| 39 | திரு. வி.கே. கணேசன் | WUA துணைத்தலைவர் | பாலக்குறிச்சி |
| 40 | திரு. பரமசிவம் | WUA தலைவர் | சோழவித்யாபுரம் |
| 41 | திரு. ராஜமாணிக்கம் | WUA துணைச்செயலாளர் | தன்னிலபாடி |
| 42 | திரு.ஆர்.வைத்திலிங்கம் | WUA தலைவர் | மகேந்திரப்பள்ளி |
| 43 | திருமதி. ஆனிஜார்ஜ் | முதன்மை நிர்வாக அதிகாரி | என்.சி.ஆர்.சி |
| 44 | திரு. பிரேம்குமார் | அணித்தலைவர் | என்.சி.ஆர்.சி |
| 45 | திரு. ஏ.யோகன்னண் | சமூக ஒருங்கிணைப்பாளர் | என்.சி.ஆர்.சி |
| 46 | செல்வி. பிரியா | அணித்தலைவர் | செம்பனார்கோவில் |
| 47 | திரு. சதீஷ்குமார் | அணித்தலைவர் | நாகப்பட்டினம் |
| 48 | திரு. தர்மலிங்கம் | NRMU Staff | TER 1 |
| 49 | திரு. சம்பத்குமார் | NRMU Staff | TER 4 |
| 50 | திரு. ராமச்சந்திரன் | NRMU Staff | TER 4 |
| 51 | செல்வி. என்.தேவி | NRMU Staff | TER 4 |
| 52 | திரு. பெருமாள் | NRMU Staff | TER 9 |
| 53 | செல்வி. ஜி.தேவி | NRMU Staff | TER 9 |

| | | | |
|---|---|---|---|
| 54 | திரு. ஜமால் | NRMU Staff | TER 9 |
| 55 | திரு. ராம்குமார் | NRMU Staff | TER 9 |
| 56 | செல்வி. உஷா | NRMU Staff | TER 9 |

பாணி பஞ்சாயத்து களப்பயண குறிப்புகள்

- 1972 ல் ஏற்பட்ட வறட்சியை புரந்தர் ஒன்றியத்தில் கிழக்கு புரந்தரில் ஏற்பட்ட நீர் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து ஏரோநாட்டிகல் பொறியியல் படிப்பில் தேர்ந்த திரு. விலாஸ்ராவ் சோலங்கி தன்னுடைய புனே தொழிற்சாலையை விட்டு சமூகப்பணியில் தன்னை அர்பணித்துக்கொண்டார்.
- அவரால் நிறுவப்பட்ட கிராம கௌரவ சம்ஸ்தானம் என்ற தொண்டு நிறுவனம் புரந்தார் ஒன்றியத்திலுள்ள கிராமங்களின் நீர்தேவையை பூர்த்தி செய்வதையே தனது குறிக்கோளாக கொண்டு செயல்பட்டது.
- அதன் முதற்கட்டமாக அவர் தனது மனைவியுடன் சேர்ந்து மழைநீர் சேமிப்பு குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தினர்.

ஊர் தலைவர்கள் மற்றும் மக்களை சந்தித்து குழுக்களை ஏற்படுத்தி மழையளவு மற்றும் நீர்சேமிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

அரசு அதிகாரிகள் மற்றும் அமைச்சரை சந்தித்து மழைநீரை சேமிக்க சிறு சிறு அணைகளை கட்ட அனுமதி கோரினார்.

- இதன் கட்டுமான பணிக்களுக்காக அவர் பயின்ற கல்லூரியின் 10 கட்டிட பொறியியல் மாணவர்களை ஈடுபடுத்த கல்லூரி முதல்வரிடம் அனுமதி கோரப்பட்டபோது, 50 மாணவர்கள் ஈடுபடுத்திக்கொள்ளுமாறு அனுமதி வழங்கப்பட்டது.
- அணை கட்டுவது தொடர்பாக பொதுப்பணித்துறை மற்றும் மாவட்ட பஞ்சாயத்தை சார்ந்த 5 நபர்கள் கொண்டு குழு அமைக்கப்பட்டு, அணை எங்கே கட்டப்பட வேண்டும் என்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வூரில் நடைபெற்ற வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தை நிறுத்தி அதன் நிதியை மழைநீர் சேகரிப்பு திட்டத்திற்கு பயன்படுத்த அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெறப்பட்டது.

கட்டுமான பணி நிறைவடைந்தவுடன், மே, ஜுன் மாதத்தில் பெய்த பருவ மழையில் அணை முழுவதும் நிரம்பி மக்கள் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினர்.

தேவையான நீர் சேமித்தவுடன் அதனை எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பது முக்கிய பிரச்சினையாக இருந்தது. பல்வேறு ஆய்வுகளுக்கு பிறகு கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

- கிணறு 1க்கு 10 நபர்கள் கொண்ட ஒரு குழு வீதம் 21 பாசனத்தாரர் குழுக்கள் அமைக்கப்பட்டு பஞ்சாயத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுதல்.
- நீர் வினியோகத்திறகான குழாய்கள் (மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கு மக்களின் பங்களிப்பாக ரூ.20 பெறப்பட்டது.
- ஒவ்வொருவருக்கு 2.5 ஏக்கர் சாகுபடிக்கு மட்டுமே நீர் வினியோகம் செய்யப்பட்டது.
- குறைந்த அளவு நீரில் அதிக விளைச்சலை தரக்கூடிய பயிர்வகைகள் சாகுபடி செய்ய ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

- நிலமில்லா விவசாயிகளுக்கு நீர் பங்கீடு கோர உரிமை உண்டு.
- நிலத்தை விற்பனை செய்யலாம். தண்ணீரை விற்பனை செய்யக்கூடாது.
- நிலமில்லாத விவசாயிகள் நிலமுள்ளவர்களிடம் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது.
- நபர் ஒருவர் ஏக்கருக்கு ரூ. 1000 நீருக்காக செலுத்தவேண்டும்.
- ஒரு நாளைக்கு 4 மணி நேரம் நீர் விநியோகிக்கப்படும்.

நீர் பாய்ச்சுபவருக்கு மாதத்திற்கு ரூ. 1500 ஊதியமாக அளிக்கப்படும்.

விவசாயிகளிடமிருந்து பெறப்படும் நிதி எதிர்கால பராமரிப்பிற்காக செலவளிக்கப்படும்.

திட்ட விளைவுகள்

- நீரின் இன்றியமையாமை உணரப்பட்டது.
- அரசின் திட்டங்கள் நன்கு அறியப்பட்டு, நிதி ஆதாரங்களை வளர்ச்சிக்கு பயன்படுத்துதல்.
- 300 ஏக்கரில் நடைபெற்ற சாகுபடி 1250 ஏக்கராக அதிகரித்தது.
- வேலையினிமித்தம் இடபெயர்தல் முற்றிலும் குறைக்கப்பட்டுள்ளது.
- நிலமில்லா விவசாயிகளும் நிலம் கிடைக்கப்பெற்றது.
- சமூக ஏற்றத்தாழ்வுகள் களையப்பட்டன.
- சமூக ஒருங்கிணைப்பு நடைபெற்றது.
- மக்கள் பங்கேற்புடன் கூடிய நீர்ப்பாசனம் மேலாண்மை செயல்படுத்தப்பட்டது.

ஹிருவே பஜார்.

<u>பின்புலம்:</u>

- ஹிருவே பஜார் பஞ்சாயத்து தலைவர் பெயர் திரு. பப்பட்ராவ் பவார்.
- 1989 முதல் இன்று வரை ஒரே பஞ்சாயத்து தலைவர்.
- இங்குள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 226.
- 100 % எழுத்தறிவு பெற்ற ஊர்.
- 1994 ல் சமூக தொண்டு நிறுவனமாக உருமாற்றம்.
- அண்ணா அசாரே யின் மாணவர்.
- சமூக கட்டுப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஊரில் கட்டாயமாக கடைபிடிக்கப்படுகிறது.
- 1000 ஹெக்டேர் சுற்றளவுள்ள கிராமம்.
- ஆண்டு மழையளவு 330 மிலி மட்டுமே
- ஒரு நாளைக்கான இவ்வூரின் மொத்த பால் உற்பத்தி 4000 லிட்டர்.
- வருட வெங்காய உற்பத்தி ரூ. 1.5 கோடி.

2008 ற்கான தொலைவுப் பார்வை

- அனைவருக்கும் நிலம்

100 குடும்பத்திற்கு கணணி பயிற்சி

- அரசு திட்டங்களைச் சாராத முழுமையான தன்னிறைவு பெற்ற கிராமமாக மாறுதல்.
- காற்றாலைகளின் மூலம் மின்சார உற்பத்தி மற்றும் உபரியான மின்சாரத்தை விற்பனை செய்தல்.

**விருதுகள்**

- **2006 ல் சிறந்த முன்மாதிரி கிராமமாக தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக ரூ.10 இலட்சம் பரிசு.**
- **சிறந்த பால் உற்பத்தி கிராமமாக தேர்ந்தெடுக்கப்படடதற்கான ரூ. 5 இலட்சம் பரிசு.**
- **சிறந்த காடுவளர்ப்பு திட்டத்தை செயல்படுத்தியதற்காக ரூ. 5 இலட்சம் பரிசு.**
- **சிறந்த சுகாதார கிராமமாக தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 5இலட்சம் பரிசு.**

**நன்கொடைகள்**

- **இப்பஞ்சாயத்தின் சார்பில் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகை மாவட்டத்திற்கு ரூ. 25000 நன்கொடையாக வழங்கப்பட்டது.**

**கற்றதும் பெற்றதும்**

- **வேலை இனி நித்தம் இடம் பெயர்தல் முற்றிலும் குறைக்கப்பட்டுள்ளது.**
- **நீரின் இன்றியமையாமை உணரப்பட்டது.**
- **அரசின் திட்டங்கள் நன்கு அறியப்பட்டு, நிதி ஆதாரங்களை வளர்ச்சிக்கு பயன்படுத்துதல்.**
- **ஜாதி மத பேதமற்ற சமூகம்**
- **1989 முதல் தேர்தல் இல்லாத அரசியல் காழ்புணர்வற்ற கிராமம்.**
- **கிராம சபையின் ஒருமித்த செயல்பாடு**
- **மக்கள் பங்கேற்புடன் கூடிய சனநாயக பஞ்சாயத்து செயல்பாடு முறைகள்**
- **மக்களின் ஒப்புதல் இருப்பின், சுழற்சி முறை தேர்தலை தவிர்க்கும் அதிகாரம் கிராம சபைக்கு உண்டு.**
- **கள்ள சாராயமும் , பணமும் இல்லாத தேர்தலை சந்தித்தால் நாம் சார்ந்த கிராமம் எல்லா வளமும் நிதர்சனமாக பெறும் என்பது திரு. பப்பட்ராவ் பவாரின் கருத்து.**

**ஒற்றுமைகள்**

- **பஞ்சாயத்து**
- **விவசாயிகள்**
- **நீர் பங்கீடு**
- **பாசனதாரர் சங்கம்**

**வேற்றுமைகள்**

| புனே | நாகப்பட்டினம் |
|---|---|
| கிணற்றுப்பாசனம் | வாய்க்கால் பாசனம் |
| தேவையின் அடிப்படையில் செயல்திட்டம் | பிரச்சனைகளின் அடிப்படையில் செயல்திட்டம் |
| நிலத்தடி நீர் , மழைநீரை சார்ந்த விவசாயம். | காவேரி டெல்டா விவசாயம் |
| வறட்சியான பகுதி | வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு அதிகம் ஏற்படும் பகுதி |
| நீர் சேமிப்பு அதிகம். | நீர் சேமிப்பின்றி வீணாவது அதிகம். |
| முறையான திட்டமிட்ட நீர்பங்கீடு | நீர்பங்கீட்டில் குளறுபடிகள் |